**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 55 of 2023

Depositions of PW -6 witness for ________ Prosecution / Defence / Court

Name : திரு. ஆர்.மாதையன்

Father's Name : ரங்கசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th **day of March** 2026.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>

1. நான் தற்பொழுது பல்லடம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.02.2023 ம் தேதி இரவு 21.00 மணிக்கு சூலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.முனிசாமி அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது ரங்கன் என்பவரது மனைவி வீரம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று வழக்கின் தன்மைப்படி சூலூர் காவல் நிலைய குற்ற எண்.64/2023 சட்டப்பிரிவு 279, 304-A இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை இணைத்து நீதித்துறை நடுவர் சூலூர் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். அதன்பின்னர் அன்றைய தினமே 22.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வினோத்குமார் மற்றும் சரவணன் ஆகியோர்கள்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வைமகசர் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. சாட்சிகள் வீரம்மாள், பெருமாள், மோகன்ராஜ், சந்திரன், வனிதா, முருகன், மாரிமுத்து, வினோத்குமார், சரவணன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பின்னர் இறப்பிற்கான காரணம் அறிய வேண்டி கோவை சிங்காநல்லூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் தொழிளாலர் ஈட்டுறுதி மருத்துவமனை சவக்கிடங்கிற்கு சென்று சவக்கிடங்கின் முன்பு சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்து முன்னிலையில் இறந்துபோன ரங்கன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டுள்ளார். பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.5** செய்யப்படுகிறது. பிரேத விசாரணை சாட்சிகள் சந்திரன், வனிதா, முருகன், மாரிமுத்து ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் இறந்து போன நபரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளார்.

3. கடந்த 06.02.2023 ம் தேதி இவ்வழக்கில் தன்னிச்சையாக நிலையம் ஆஜரான எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து தக்க ஜாமினில் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். அதன் பின்னர் வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் வழக்கில் எதிரி ஓட்டிச் சென்று விபத்து ஏற்படுத்திய TN 28 AD 7997 வாகனத்தினை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை கிடைக்க பெற்றேன். TN 28 AD 7997 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாகனத்தை ஆய்வு மேற்கொண்ட மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சண்முகசுந்தரம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் சம்பவத்தில் இறந்து போன ரங்கன் என்பவரது இறப்பை உறுதி செய்த கோவை சிங்காநல்லூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு.பிரகாஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெற்றேன். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 06.03.2023 ம் தேதி சட்டப்பிரிவு 279 மற்றும் 304-A ன் படி குற்றம் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் சம்பவத்தில் இறந்த நபரின் உறவினர்கள் மற்றும் தெரிந்தவர்களைத்தான் பார்வை மகஜர் சாட்சிகள் ஆக விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல

.மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடையில் உள்ள யாரையும் இவ்வழக்கில் நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் புகார் பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையால் மேற்படி விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சரிவரப் புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது தவறுதலான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.11 20:08:32 +0530

<u>**மறுவிசாரணை**</u> இல்லை

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**